**IN THE COURT OF SPECIAL COURT FOR**

**TRIAL OF CASES UNDER SC/ST (POA) ACT, TIRUVANNAMALAI.**

**SPECIAL SESSIONS CASE NO. 21 OF 2020**

**Deposition of Witness for : PW– 11 (LW–8)**

| | | |
|---|---|---|
| **Name** | : | திரு.பாலாஜி |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14-07-2026**

A1 absent. A2 to A5 present.

**முதல் விசாரணை –**

நான் சேத்பட்டில் குடியிருக்கிறேன் . கூலிவேலை செய்கிறேன் . ஆஜர் எதிரிகளை தெரியாது . அ.சா.1 வெங்கடேசனை தெரியாது . இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி போலிஸ் விசாரணையில் கூறியதில் இருந்து முற்றிலும் மாறுபட்டு சாட்சியம் அளிப்பதால் அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி , குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் போலிஸ் விசாரணையில் எனது பெரியம்மா மகன் சசிகலா அவரது குடும்பத்துடன் மஞ்சுராபாத் புதூர் அருந்ததியர் காலனியில் வசித்து வருகிறார் என்றும் அவரது கணவர் வெங்கடேசன் செருப்பு தைக்கும் வேலை செய்கிறார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் தெரியாது . சசிகலாவின் கணவர் வெங்கடேசனுடன் அவரது அப்பா தேவராஜ் மற்றும் அவரது அம்மா எல்லம்மாள் ஆகியோர் வசித்து

வருகிறார்கள் என்றும், பக்கத்தில் வெங்கடேசனின் அண்ணன் ஆறுமுகம் வசித்து வருகிறார் என்றும் , வெங்கடேசன் 70 செண்ட் பாதை புறம்போக்கில் கூறைவீடு கட்டி வசித்து வருகிறார் என்றும் , தற்போது அதன் பக்கத்திலேயே புதியதாக வீடு கட்டி வருகிறார் என்றும் அவர்களது நிலத்திற்கு பக்கத்தில் உள்ள தனசேகர் ,கோவிந்தராஜ், தேவராஜ், முனுசாமி, தனபால் ஆகியோர் நிலம் உள்ளது என்றும் , அவர்கள் வெங்கடேசன் நிலத்தின் வழியாக மேற்படி பக்கத்து நிலத்துகாரர்கள் அவர்கள் நிலத்திற்கு செல்ல வழிவிடுமாறு கேட்டு நீண்ட நாட்களாக வெங்கடேசன் மற்றும் அவரது அப்பாவிடம் தகராறு செய்ததால் முன் விரோதம் இருந்துவந்தது தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. 14.02.2020 ம் தேதி சசிகலா அவரது அண்ணன் முருகனுக்கு போன் மூலம் தொடர்புகொண்டு புதியதாக கட்டும் வீட்டிற்கு கிரகபிரவேசம் செய்யவேண்டும் என்றும் அதைபற்றி பேசவாருங்கள் என்று சொன்னதால் 15.02.2020 ம் தேதி நானும், எனது அம்மா குணசேகரி மற்றும் சசிகலா அண்ணன் முருகன் அவரது மனைவி ரமா ஆகியோர் எங்கள் ஊரிலிருந்து புறப்பட்டு காலை 8.00 மணிக்கு சசிகலா வீட்டிடம் வந்தபொழுது பக்கத்து நிலத்துக்காரர்களான ராஜகோபால் மகன் தேவராஜ் அவரது மகன் முத்துசாமி மற்றும் முருகன் மகன் கோவிந்தராஜ், கண்ணன் மகன் தனபால் , முருகேசன் மகன் தனசேகர் ஆகியோர் நிலத்தில் புதைத்திருந்த பைப்பை சரிசெய்தனர் என்றும் அப்போது வெங்கடேசன் சென்று ஏம்பா நான் தான் சரிபன்னி தரேன்னு சொன்னேனே , சொல்லியிருந்தா அப்பவே சரிபன்னியிருப்பேன்னில்ல என்று கேட்டதற்கு அவர்கள் அனைவரும் வெங்கடேசனை பார்த்து டேய் செக்கிலி தேவிடியா பையா என்று சொல்லி ஏதாவது பேசினால் உன்னை குடும்பத்தோடு வீட்டில் வைத்து கொளுத்திடுவேன் என்று மிரட்டியதாகவும் . அப்போது வெங்கடேசன் மனைவி சசிகலா என்பவர் அவர்களை பார்த்து எங்கள் நிலத்திலேயே பைப் புதைச்சுட்டு கேட்டா எங்களையே கொளுத்திடுவேன் என்று சொல்வீங்களா என்று அவரது கூரை வீட்டிற்கு வடக்கே சமையல் செய்யும் இடத்திலிருந்து கேட்டபொழுது அவர்கள் சசிகலாவைப்பார்த்து அடி செக்கிலி நாயே என்ன திமிரு இருந்தா எங்கள எதிர்த்து பேசுவ என்று அசிங்கமாக திட்டி ஐந்துபேரும் அவர்கள் வீட்டிடம் ஓடிவந்து சமையல் செய்துக்கொண்டிருந்த சசிகலாவை தனசேகர் என்பவர் கையால் அவரது இடது கன்னத்தில் அடித்தார் என்றும்

,தேவராஜ் மற்றும் கோவிந்தராஜ் ஆகிய இருவரும் காலால் சசிகலாவின் வயிற்றின்மீது எட்டி எட்டி உதைத்தனர் என்றும் , சசிகலா சுருண்டு விழுந்துவிட்டார் என்றும் , அங்கிருந்த நாங்களும், வெங்கடேசனும், அவரது அப்பா தேவராஜ் மற்றும் அடபாவிகளா ஏன்டா இப்படி அவள அடிச்சு போட்டுடீங்களே என்று ஓடிபோய் சசிகலாவை தூக்கிபார்த்தபொழுது அவர் பேச்சுமூச்சு இல்லாம் இருந்தார் என்றும் , அதைப்பார்த்த தேவராஜ், கோவிந்தராசு, தனபால், முத்துசாமி, தனசேகர் ஆகியோர் பயந்துகொண்டு அங்கிருந்து ஓடிவிட்டனர் என்றும் , சசிகலாவிற்கு அவரது கணவர் வெங்கடேசன் வாயில் தண்ணீர் ஊற்றியபொழுது தண்ணீர் இரங்கவில்லை என்றும் , உடனே வெங்கடேஷ்அங்கிருந்த இருசக்கர வாகனத்தில் சென்று சிறுது நேரத்தில் எங்கள் ஊர் தலைவர் துரைகண்ணு, உபதலைவர் நரசிம்மன், கவுன்சிலர் முருகையன் ஆகியோர்களை அழைத்துக்கொண்டு வந்தார் என்றும் , உபதலைவர் நரசிம்மன் என்பவர் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்து ஆம்புலன்ஸ் வந்தது என்றும் , ஆம்புலன்சில் வந்த நர்ஸ் சசிகலாவை பரிசோதனை செய்து சசிகலா இறந்துவிட்டதாக சொல்லிவிட்டு ஆம்புலன்சை எடுத்து சென்றுவிட்டனர் என்று சொல்லியுள்ளேன் என்றால் தெரியாது . சசிகலாவின் கணவர் புகார் கொடுத்து மங்கலம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவுசெய்ததாக சொல்லி போலிசார் விசாரித்தபொழுது மேற்சொன்னவாறு சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**</u> இல்லை

Deposition of Witness recorded in computer under my dictation to Typist in Open court and read over to the witness and acknowledged by him /her as correct.

V SUTHA
Digitally signed by V SUTHA
Date: 2026.07.14 19:00:54 +0530

**SESSIONS JUDGE,**
**SPECIAL COURT FOR TRIAL**
**OF CASES UNDER SC/ST (POA) ACT**
**TIRUVANNAMALAI.**